**அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 11 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 34,792 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | தெபொக்காவ பொதுச் சந்தையை வாடகைக்கு கொடுத்தல் மற்றும் நடமாடும் வர்த்தக வாகனங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக பாதுகாப்பு வைப்புக்களின் பெறுமதி ரூபா 258,501 தொகை மிகையாகக் கணக்கீடு செய்திருந்தது. | | தவறுதலாக மிகைப் பாதுகாப்பு பிணை வைப்புக்கள் அறவிடப்பட்டிருந்தது. |
| (iii) | மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 775,000 பெறுமதியான 07 கட்டிடங்களை மூலதனப்படுத்தி யிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பிரதேச சபைக்கு உரித்தில்லாத ரூபா 40,000 பெறுமதியான இரண்டு காணிகள் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடம் சொத்துக்களில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகத்தினால் எரிபொருள் செலவுகள் மீளளிப்பு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 703,285 இற்கான தொகையினை கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | தவறுதலாக கடன்பட்டோரின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்காததுடன் அடுத்த வருடம் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டின் போது நகரத்தின் பிரதான சுற்று வட்டத்தின் பாதுகாப்பு வேலி நிர்மாணித்தல் தொடர்பாக செலவிடப்பட்டிருந்த ரூபா 37,305 தொகை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடம் மூலதனப்படு த்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய நீதிமன்றத் தண்டப்பண மீதி ரூபா 2,122,414 தொகை மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 65,068 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக மாதாந்த அட்டவணைகள் கிடைத்தவுடன் அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 128,677,111 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட அட்டவணைகளை நாளது வரை ஆக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) | வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்தல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி ஆதனங்களின் அட்டவணைகள் திருத்தப்படும் விடயங்கள் நடைபெறுவதுடன் அதனை விரைவாக பூர்த்தி செய்து பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 02 | வாகன அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்காக செலுத்தியிருந்த ரூபா 35,670 இற்கான தண்டப் பணத்தை பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தண்டப் பணத்தினை செலுத்தி வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371 | துணைக் கட்டுநிதி குறிப்பிட்ட விடயம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டுமெனினும், 2008 முதல் 2013 வரை வழங்கியிருந்த ரூபா 264,935 தொகை தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன். |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,595,163 தொகைக்கான 236 பொது வைப்பு மீதிகள் மற்றும் நூற்றிற்கு 10 பிடிபணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | 2 வருடங்களை மிகைக்காத வைப்பு மீதிகளை சபையின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொள்வேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,046,597 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,703,288 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதுக் கணக்கின் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காசேட்டின் மீதி மற்றும் ஐந்தொகையில் மீதியிடையே ரூபா 12,000 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 485,000 | 614,030 | 583,960 | 168,266 | 310,000 | 362,595 | 330,095 | 262,361 |
| வாடகை | 12,488,800 | 12,082,712 | 11,915,273 | 715,195 | 12,063,500 | 13,180,863 | 12,463,446 | 1,563,323 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,075,300 | 1,282,652 | 1,280,652 | 45,000 | 1,021,500 | 809,104 | 801,079 | 97,965 |
| ஏனைய வருமானங்கள் | 4,829,800 | 5,149,232 | 1,611,043 | 6,634,930 | 7,086,800 | 4,064,878 | 3,729,895 | 4,069,451 |
| மொத்தம் | 18,878,900 | 19,128,626 | 15,390,932 | 7,563,391 | 20,481,800 | 18,417,440 | 17,324,515 | 5,993,100 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 25,121,726 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 15,390,932 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 61 சதவீதமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,900,000 தொகை சபைக்கு கிடைத்திருக்காததுடன், நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 84 வியாபார அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரி ரூபா 166,380 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தின் 152(4) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையினை பதிவழிப்பதற்காக இனங்கண்டிருந்த மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மற்றும் மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,122,414 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 4,468,847 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவீடு செய்ய வேண்டும். | இலக்குகளை நேரடியாக பெற்றுக்கொள்வதற்காக நீண்ட காலத் திட்டமொன்று சபையில் காணப்பட்ட போதிலும், சபையினால் மேற்கொள்ளப்படும் அனேகமான நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதை மறைமுகமாக பாதித்துள்ளது. |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்கு உத்தேசித்திருந்த 25 அபிவிருத்தித் திட்டங்களில் 02 அபிவிருத்தி திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப் பட்டிருந்தது. | பாதீட்டில் உள்ளடங்கிய அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கவனம் செலுத்தப் பட வேண்டும் | 2018 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரதேச சபைக்கு மக்கள் பிரதிநிதிகள் நியமனம் பெற்றுவந்தவுடன் அந்த பிரதிநிதிகளுக்கு தேவையான அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 09 ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யும் வரை ஓய்வுபெற்ற அரசாங்க பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது. தகனகூட இயக்குனர், தகனகூட இயக்குனர் உதவியாளர், 02 சுகாதார தொழிலாளர்கள் புதிதாக சேர்த்துக் கொள்வதற்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்பட்டு அந்த தீர்மானத்தின் அங்கீகாரத்திற்காக உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பித்திருந்ததுடன் மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பித்துள்ளேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையில் இருந்து விளகிச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 14,698 தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்பு மீதி விரைவாக தீர்க்கப்பட வேண்டும். | ரூபா 14,698 தொகைக்கான ஊழியர் பிணை வைப்பு மீதியை விரைவாக தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 7,826,130 தொகைக்கான 20 காணிகள் மற்றும் ரூபா 1,935,000 தொகைக்காக 12 கட்டிடங்கள் என்பவற்றின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | காணிகள், கட்டிடங்கள் உரித்தாக்குவதற்கு உரிய அலுவல்கள் மேற்கொள்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் அனுபவிக்கும் 25 காணிகளின் உரிமையை மீளாய் வாண்டின் போதும் உரித்தாக்குவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை கணக்கு உரித்தாக்க வேண்டும். | காணிகள், கட்டிடங்கள் உரித்தாக்குவதற்கு உரிய அலுவல்கள் மேற்கொள்வேன். |

## 4. கணக்களிக்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டில் உள்ளடங்கிய ரூபா 10,000 இனை மிகைத்துள்ள 14 செலவு விடயங்களுக்கான ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 7,496,500 இற்கான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பாக சுட்டிக் காட்டிய விடயங்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 28,399,537 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 33 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பாக சுட்டிக் காட்டிய விடயங்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நான்கு செலவு விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 1,707,606 தொகையாகக் காணப்பட்டதுடன், அவை 21 சதவீதம் முதல் 41 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பாக சுட்டிக் காட்டிய விடயங்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 04 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 27,491,403 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்ட துடன், அவை 35 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பாக சுட்டிக் காட்டிய விடயங்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |